## மதுரை–மண்டபம் நெடுஞ்சாலை

*633 வினா—திரு. த. சோனையா: மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமனாதபுரம் மாவட்டம், மதுரை-மண்டபம் நெடுஞ்சாலையின் அருகில் வைகை ஆறு வருவதால் தட்டாங் குளத்திலிருந்து மார்நாட்டு கால்வாய் முகப்பு வரையிலும் பல இடங்களில் ரோடு அரிக்கப்படுவது உண்மையா?

(இ) ஆமெனில், அரிப்பு ஏற்படாமல் இருக்க முண்டுகள் வைத்து தடுப்புச் சுவர் கட்ட அரசிடம் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** (அ) & (இ) ஆம்.

**திரு. த. சோனையா:** தலைவரவர்களே, மதுரை-மண்டபம் நெடுஞ்சாலையின் அருகில் தட்டாங்குளத்திலிருந்து மார்நாட்டு கால்வாய் வரையிலும் அந்த ரோடுகளுக்கு அருகில் வைகை ஆறு ஓடுவதால் அடிக்கடி வைகையிலே பெருவெள்ளம் ஏற்படும் காலங்களில் ரோடுகளும் சேதப்படுகின்றன. ஆகவே, அப்படித் தண்ணீரில் அடிபட்டு அடிக்கடி சேதம் ஏற்படாத வகையில் அங்கே ஒரு தாங்குசுவர் அல்லது ரிவெட்மெண்ட் கொடுக்க ஏற்பாடு செய்யப்படுமா?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** தலைவரவர்களே, 1,81,400 ரூபாய் செலவில் இதைச் செய்யலாம் என்று கருதி எஸ்டிமேட் தயாரிக்கப்பட்டு, ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு, மத்திய அரசுக்கு பரிந்துரை செய்யப்பட்டிருக்கிறது. மத்திய அரசு ஒப்புதல் கொடுத்தவுடன் வேலைகள் துவங்கப்படும்.

## கொல்லிமலையில் நில ஒப்படை

***634 வினா—திரு. சி. சின்னவெள்ளையன்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சேந்தமங்கலம் சட்டப் பேரவைத் தொகுதி, கொல்லிமலையில் எத்தனை பேர்களுக்கு இதுவரை நிலப் பட்டா கொடுக்கப்பட்டுள்ளது?